செய்தி வெளியீடு எண்– 825 நாள். 1.10.08

<u>செய்திக் குறிப்பு – 01.10.2008</u>

தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில், பாதுகாப்பு நடவடிக்கையினை வலுப்படுத்த மேற்கொள்ளப்படவேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும், பின்பற்றவேண்டிய நடைமுறைகள் குறித்தும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர் பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் இன்று (01.10.2008) இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலக கூட்ட அரங்கில் கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு.க.முத்துசாமி அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலர்/ஆணையர் திரு.த.பிச்சாண்டி அவர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் சிறப்புப்பிரிவு–தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை திரு. கே.என். சத்தியமூர்த்தி அவர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறையின் இணை ஆணையர் (தலைமையிடம்), இணை ஆணையர் (திருப்பணி), அனைத்து மண்டல இணை ஆணையர்கள், முக்கிய திருக்கோயில்களின் இணை ஆணையர்/செயல் அலுவலர்கள், துணை ஆணையர்/செயல் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன் எச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டு, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் திருக்கோயில்களின் எல்லைக்குட்பட்ட, மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, திருக்கோயில்களுக்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டது. பக்தர்கள் அதிக அளவில் வருகை தரும் திருக்கோயில்களிலும், வழிபாட்டுத் தலங்களிலும், பிற முக்கிய திருக்கோயில்களிலும் நிரந்தரமான கண்காணிப்பு கேமரா பொருத்திடவும், மேற்படி நடவடிக்கைகளை 24 மணி நேரமும் கண்காணிக்க மைய கட்டுப்பாட்டு அறை அமைக்கவும், மேலும் பாதுகாப்புக்கு தேவையான கள்வர் எச்சரிக்கை மணி, கோள் சொல்லி கடிகாரம், (Tell Tale Clock) மற்றும் தீயணைப்புக் கருவிகள் போன்ற சாதனங்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்கவும், இரவு பகல் இரு நேரமும் காவல் பணியாளர்களை ரோந்து பணியில் ஈடுபடுத்தவும் அறிவுறுத்தப்பட்டது. இது தொடர்பாக திருக்கோயில் செயல் அலுவலர்களும், இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களும் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து, அடிக்கடி தொடர்பு கொண்டு, பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்து, வலுப்படுத்தவும் வழிபாட்டுத்தலங்களுக்குத் தேவையான கூடுதல் பாதுகாப்பினை உறுதி செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

இணை ஆணையர் (தலைமையிடம்)

**********

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9